www.tamilarangam.net

**HUMAN RIGHTS WATCH**

350 Fifth Ave, 34th Floor
New York, NY 10118
Phone: 212.290.4700
Fax: 212.736.1300
hrwnyc@hrw.org

**CHILDREN'S RIGHTS DIVISION**
Lois Whitman
*Executive Director*
Jo Becker
*Advocacy Director*
Michael Bochenek
*Deputy Director*
Zama Coursen-Neff
*Senior Researcher*
Clarisa Bencomo
Tony Tate
*Researchers*
Elizabeth Calvin
*Advocate*
Ranee Adipat
*Associate*
Elizabeth Siegel
*Associate*

**ADVISORY COMMITTEE**
Robert G.Schwartz
*Chair*
Roland Algrant
*Vice-Chair*
Goldie Alfasi-Siffert
Mark Allen Belsey
Rachel Brett
Pam Bruns
Bernardine Dohrn
Alice Henkin
Kathleen Hunt
Eugene Isenberg
Sheila B. Kamerman
Rhoda Karpatkin
Miriam Lyons
Joy Moser
Elena Nightingale
Valerie Pels
Wendy Smith Meyer
Javier Stauring
Anne Studzinski
Yodon Thonden
Lisa Woll

**HUMAN RIGHTS WATCH**
Kenneth Roth
*Executive Director*
Allison Adoradio
*Operations Director*
Michele Alexander
*Development & Outreach Director*
Carroll Bogert
*Associate Director*
Peggy Hicks
*Global Advocacy Director*
Iain Levine
*Program Director*
Dinah PoKempner
*General Counsel*
James Ross
*Senior Legal Advisor*
Joe Saunders
*Deputy Program Director*
Wilder Tayler
*Legal and Policy Director*
Joanna Weschler
*UN Advocacy Director*
Jane Olson
*Chair, Board of Directors*

# ‘இறுதி யுத்த’ நிதிக்காக தமிழ்ப் புலிகள் இயக்கம் புலம் பெயர்ந்தோரிடம் பலாத்கார பணப்பறிப்பு.

## *கனடாவிலும், இங்கிலாந்திலும் உள்ள தமிழ் குடும்பங்கள், வர்த்தகர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்.*

(நியூ யோர்க், மார்ச் 15,2006) - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது (LTTE அல்லது தமிழ் புலிகள்) இலங்கையில் தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காக, நிலையானதும் தொடர்ச்சியானதுமான நிதி வரவுக்காகவும், தாம் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விமர்சனங்களை நசுக்குவதற்காகவும், கனடா, இங்கிலாந்து மற்றும் மேற்கு நாடுகளில் வாழுகின்ற இலங்கைத் தமிழர்கள் மீது, அச்சுறுத்தல் பலாத்காரப் பணப்பறிப்பு என்பவை மட்டுமன்றி வன்முறை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றனர், என்று, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் இன்று வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

***‘இறுதி யுத்தத்திற்கு’ நிதியுதவி செய்தல்*** *புலம் பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும்,* என்னும் 45 பக்கங்களைக் கொண்ட இவ் அறிக்கையில், புலிகள் இயக்கமும், புலிகள் இயக்கத்திற்கு சார்பான குழுக்களும் மேற்கு நாடுகளில் வாழும் தமிழ் சமூகத்தினரின் மீது, சட்ட விரோதமான முறையில் அழுத்தங்களை பிரயோகித்து, தமக்கு நிதி வழங்குவதற்கான இணக்கங்களை பெற்றுக்கொள்ளுகின்றனர். தம்மால் கோரப்படுகின்ற தொகையினை அவர்கள் வழங்காது விட்டால், இலங்கையில் உள்ள அவர்களின் குடும்ப அங்கத்தவர்களை பார்ப்பதற்கு அவர்கள் செல்ல முடியாது என அந்த மக்களிடம் புலிகள் இயக்கத்தால் கூறப்படுகின்றது. ஏனையவர்களுக்கோ “கவனித்துக் கொள்கிறோம்” அல்லது “பாடம் கற்பிக்கப்படும்” என எச்சரிக்கைகள் விடப்படுகின்றன. டொரன்டோவைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் எம்மிடம் கூறுகின்ற பொழுது, தான் 20,000க்கு மேற்பட்ட கனேடிய டொலர்களை கொடுக்க மறுத்ததால், தனது மனைவி பிள்ளைகளுக்கு ஆபத்து நிகழலாம் என்ற வகையில் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகளால் அச்சுறுத்தப்பட்டதாகக், கூறினார்.

இவ்வறிக்கையை தயாரித்த ஜோ பேக்கர் மேலும் கூறுகின்ற பொழுது “புலம்பெயர் வாழ் தமிழர்களில் அனேகமானவர்கள் புலிகள் இயக்கத்திற்கு மிகவும் ஊக்கத்துடன் தமது ஆதரவை வழங்குகின்ற அதே வேளை, ஏனையவர்களிடம் இருந்து பலாத்காரப் பணப்பறிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் மூலமாக அவ்வியக்கமானது தனது நடவடிக்கைகளுக்காக நிதியை பெற்றுக் கொள்கிறது,” என்றார். “இலங்கையில் நிகழ்கின்ற அரசியல் படுகொலைகள் மற்றும் சிறார்களை படையில் சேர்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்காகத்தான் தாங்கள் நிதியை வழங்குகின்றோம் என்று தெரிந்திருந்தாலும், புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இயக்கத்தை ஆதரிக்காத தமிழர்களும்கூட அவர்களுக்கு பணத்தை வழங்குவதைத் தவிர, தமக்கு வேறு வழியேதும் இல்லை என்று உணர்கின்ற அளவிற்கு, அவ் அச்சம் நிறைந்த கலாச்சாரம் மிகப் பலமாக இருக்கின்றது.”

இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையே 19 வருட காலமாக மிக உக்கிரமாக நடந்த சிவில் யுத்தமானது இலங்கைத் தமிழர்களின் சனத்தொகையில் கால்வாசியை அண்மித்த தொகையினர் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு காரணமாக அமைந்ததோடு, 600,000க்கும் 800,000கும் இடைப்பட்டதான புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் ஒன்றையும் உலகளாவிய ரீதியில் உருவாக்கியுள்ளது. இதில் அரைவாசியை அண்மித்த தொகையினர் கனடாவிலும் இங்கிலாந்திலும் வாழ்கின்ற அதே வேளை, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், மற்றும் அவுஸ்திரேலியா உட்பட பல மேற்கு நாடுகளிலும் கணிசமான புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களில் அனேகமானோரின் உறவினர்கள் சிங்கள மேலாதிக்கம் கொண்ட இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களினால் கடும் துன்பங்களுக்கு முகம் கொடுத்ததனால் பகிரங்கமாகவே இவர்கள் புலிகள் இயக்கத்தை ஆதரிக்கின்றனர்.

2005ம் ஆண்டு பிற்பகுதியில், இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையேயான “இறுதி யுத்தம்” என புலிகள் இயக்கத்தால் அழைக்கப்பட்ட நடவடிக்கைக்கு நிதி சேகரிப்பதற்காக, கனடா மற்றும் ஐரோப்பாவின் பல பகுதிகளில் வாழும் புலம்பெயர் தமிழ் சமூகத்தின் தனிநபர்கள் மற்றும் வர்த்தக உரிமையாளர்கள் மீது அழுத்தத்தை பிரயோகிப்பதற்காக, புலிகள் இயக்கத்தினர் மிகத் திட்டமிட்டதும் தீவிரமானதுமான நிதி சேகரிப்பு நடவடிக்கை ஒன்றினை முடுக்கி விட்டனர். இலங்கையில் நடைமுறையிலுள்ள கடந்த - நான்கு - வருடகால யுத்த நிறுத்தத்திற்கு ஆபத்தினை ஏற்படுத்துகின்ற விதத்தில், அரசாங்கப் படைகளின் மீது புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் அதிகரிப்பட்ட ஏககாலத்திலேயே, அவர்களின் இந்த நிதிச் சேகரிப்பு நடவடிக்கையும் முடுக்கி விடப்பட்டது.

கனேடிய தமிழர்கள் அதிகமாக வாழும் டொரன்டோவில் உள்ள குடும்பங்கள் 2,500 முதல் 5,000 வரையான கனேடிய டொலர்களை வழங்க வேண்டும் என புலிகள் இயக்கத்தினர், அழுத்தங்களை இட்டுள்ளதோடு, சில வர்த்தக உரிமையாளர்கள் 100,000 கனேடிய டொலர்களை வழங்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளனர். இலண்டனில், அனேகமான குடும்பங்கள் 2,000 பவுண்டுகள் வழங்க வேண்டும் என கேட்கப்பட்டதோடு, வர்த்தக உரிமையாளர்கள் 10,000 முதல் 100,000 பவுண்டுகள் வரையான தொகைகளுக்காக அணுகப்பட்டுள்ளனர். நோர்வே மற்றும் பிரான்சில் வாழும் தமிழர்களும் இதற்கு சமனான தொகையினை வழங்க வேண்டும் என அணுகப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நிதி வழங்க முடியாத நிலையில் உள்ள தமிழர்களிடம், வேறு யாரிடமாவது பணத்தைப் பெற்றுத் தாருங்கள் அல்லது தமது வங்கிக் கடன் அட்டைகளுக்கூடாக (credit cards), அல்லது வீடுகளை அடமானம் வைத்து தமது பங்களிப்பை செய்யும்படி புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிப்பாளர்களினால் கூறப்பட்டுள்ளது. தொழில் இல்லாத ஒருவர் புலிகளால் அணுகப்பட்டு, புலிகள் இயக்கத்திற்கு நிதி வழங்குவதற்கு ஏற்ற வகையில் அவர் தனது ஒரு நேர உணவைத் தவிர்க்க வேண்டும் எனறும் கேட்கப்பட்டுள்ளார்.

மேற்கு நாடுகளில் உள்ள தமிழ் ஊடகங்கள், இந்து கோயில்கள் மற்றும் பொது அமைப்புக்கள் உட்பட இலங்கைத் தமிழர்களுடன் தொடர்பான நிறுவனங்கள் மீது புலிகள் இயக்கமானது நீண்டகாலமாகவே தமது கட்டுப்பாட்டை வைத்திருக்க முயன்றுள்ளது. இலண்டனில் உள்ள ஒரு கோயிலின் பொறுப்பை புலிகள் இயக்கத்தோடு நெருக்கமான ஓர் குழுவிடம் கையளிப்பதற்கு இணங்கும்வரை, இங்கிலாந்தைச் சேர்ந்த இரண்டு தமிழர்களை, 2005ம் ஆண்டில், புலிகள் இயக்கமானது பல வாரங்களாக இலங்கையில் தடுத்து வைத்தது.

தமிழ்ப் புலிகள் இயக்கத்தை வெளிப்படையாக விமர்சிக்கின்ற, அல்லது புலிகள் இயக்கத்திற்கு எதிரானவர்கள் என்று கருதப்படுகின்ற, புலம்பெயர் தமிழ் பத்திரிகையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் என்போர், புலிகள் இயக்கத்தினால் அல்லது அவர்களோடு நெருக்கமான

குழுக்களினால் மரண அச்சுறுத்தல், கடுமையான தாக்குதல்கள், சேறடிப்பு பிரச்சாரங்கள் மற்றும் இட்டுக் கட்டப்பட்ட கிரிமினல் குற்றச் சாட்டுகளுக்கும், உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

"தமிழ் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அத்துமீறல்கள் என்பவை தொடர்பாக தாம் கதைத்தால், தம்மையும் தமது குடும்பங்களையும் தாங்களே ஆபத்திற்குள் தள்ளி விடுகிறோமோ என்று மேற்கு நாடுகளில் வாழுகின்ற இலங்கைத் தமிழர்கள் அச்சப் படுகின்றனர்," என ஜோபேக்கர் கூறுகிறார். "புலம்பெயர் சமூகத்தினரின் அளவும், புலிகள் இயக்கத்தின் செயல்பாடுகள் மீது அது ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தின் திறன் எவ்வளவு இருந்தாலும், புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அச்சுறுத்தல்கள், நெருக்குவாரங்கள் மற்றும் வன்முறைகள் என்பவற்றின் மூலம் அம்மாற்றுக் கருத்துக்கள் மிக காத்திரமான வகையில் நசுக்கப்பட்டு விடுகின்றன."

இலங்கையில் வாழும் தமது குடும்ப அங்கத்தவர்களை பார்ப்பதற்காக மேற்கு நாடுகளில் இருந்து திரும்பிச் செல்லும் தமிழர்களை அடையாளம் காணுகின்ற புலிகள் இயக்கமானது, இலங்கையின் வடக்கே அமைந்துள்ள தமது இயக்கத்தின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் அவர்கள் வந்ததும், தமக்கு நிதி வழங்கும்படி மிகத் திட்டமிட்ட வகையில் அவர்கள்மீது அழுத்தங்களை பிரயோகிக்கின்றனர். அவர்கள் மேற்கு நாடுகளில் வாழ்ந்த காலத்தின், ஒரு நாளைக்கு 1 டொலர், 1 பவுண்ட் அல்லது 1 யூறோ என அவர்கள் கணக்கிடுகின்றனர். அதன்படி பல வருடங்களாக வெளிநாடுகளில் வாழ்ந்தவர்கள் பல ஆயிரம் டொலர்களை செலுத்தும்படி கேட்கப்படுவதோடு, அவ்வாறு கேட்கப்பட்ட தொகையை செலுத்தாத பட்சத்தில் அவர்கள் திரும்பி போகமுடியாது என்றும் கூறப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில், அப்பணத்தொகை செலுத்தப்படும்வரை அவர்களின் கடவுச் சீட்டுக்களை புலிகள் இயக்கத்தினர் பறிமுதல் செய்கின்றனர்.

கனடாவில் அல்லது ஐரோப்பாவில் வாழுகின்ற அனேகமான தமிழர்கள், இலங்கையில் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இன்னமும் வாழுகின்ற தமது குடும்ப உறவினர்களின் பாதுகாப்புபற்றி அச்சப்படுகின்றனர். இலங்கையில் 2002ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த யுத்த நிறுத்தத்தின் ஆரம்பத்தில் இருந்தே, பெரும்பாலும் அரசியல் காரணங்களுக்காக, அதிகமான தமிழர்கள் உட்பட 200க்கும் மேற்பட்ட நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவற்றில் அனேகமான கொலைகள் தொடர்பாக புலிகள் இயக்கத்தின் மீதே குற்றம் சாட்டப்படுகின்றது.
[பார்க்க: "Political Killings Escalates," http://hrw.org/english/docs/2005/08/15/slanka11630.htm]

புலம்பெயர் தமிழ் சமூகத்தினர்மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் பலாத்காரப் பணப்பறிப்பு என்பவற்றில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக கடுமையான நடவடிக்கைகளை கனடா மற்றும் இங்கிலாந்து அரசாங்கங்கங்களின் அதிகாரப் பிரிவுகள் எடுக்க வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வலியுறுத்துகின்றது. தமிழ் புலிகள் இயக்கத்துடன் தொடர்பான பலாத்கார பணப்பறிப்பு மற்றும் நெருக்குவாரங்கள் என்பவை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான விசேட விசாரணை செயலணிகளை (Special interagency task force) நிறுவும்படியும், இவை தொடாபான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு உள்ள வழி வகைகள் மற்றும் பொருத்தமான சட்ட விடயங்களை தமிழ் மக்களுக்கு பகிரங்கப் படுத்துகின்ற வகையிலான கல்விப் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், அச்சுறுத்தல்கள் மற்றும் பணப்பறிப்பு என்பவற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு விசேடமான உடன் தொலைபேசி வசதிகளை (Hotline) செய்வதோடு, புலிகள் இயக்கத்தோடு தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்கு தமிழ் சமூகத்துடனான சந்திப்புக்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று இவ்வறிக்கையானது பரிந்துரை செய்கின்றது.

"இது வெறுமனே உதிரியாக நிகழும் குற்றச் சம்பவங்களுக்கு நடவடிக்கை எடுப்பது போன்றதொரு விடயமல்ல, மாறாக ஒரு ஒட்டுமொத்தமான சமூகமானது அச்சமின்றி வாழுகின்ற, அதன் உரிமையைப் பாதுகாக்கின்ற விடயமாகும்." என்றார் ஜோ பேக்கர். "ஒரு பல்கலாசார சமூகத்தில், வெறுமனே தமிழ் பிரைச்சினையாக மட்டும் பார்த்து அரசாங்கங்கள் இதனைக் கையாள முடியாது. இது ஒரு கனேடியப் பிரைச்சினை, ஒரு பிரித்தானியப் பிரைச்சினை."

மேற்கு நாடுகளில் தமது நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக புலிகள் இயக்கத்திடம், மனித உரிமைகள் கண்காணிப்பபு அமைப்பினால் எழுத்து மூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எந்தவிதமான பதிலுரைகளையும் அவர்கள் வழங்கவில்லை.

**"இறுதி யுத்தத்திற்கு" நிதியுதவி செய்தல்: புலம் பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும்,** என்னும் அறிக்கையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்குமூலங்கள்:

*கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாகவே, இதுபோன்ற பல தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. குறிப்பாக புலிகள் இயக்கத்திற்கு எதிராக விமர்சனங்களை முன்வைப்பவர்கள், அல்லது புலிகள் இயக்கத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைக்க முயல்பவர்களுக்கு எதிராகவே பிரதானமாக இவை நிகழ்கின்றன...........* ***ஆகவே முக்கியமாக, சமூகத்தை மௌனமாக்கி வைத்திருப்பதற்காக இதுபோன்ற தாக்குதல்கள் அடிக்கடி நிகழ்கின்றன.***

- புலிகள் இயக்கத்தை விமர்சித்தமைக்காக வடஇலங்கையில் கொல்லப்பட்ட ஒருவருக்கு, நினைவுகூரல் நிகழ்வு ஒன்றினை ஒழுங்கு செய்தமைக்காக 2005 நவம்பரில், உடல் ரீதியாக தாக்குதலுக்கு உள்ளான ஜெர்மன் தமிழர். வீ.லோகநாதன்

*"நான் என்ன உணர்கிறேன் என்பதை முன்னர் நான் வெளிப்படையாக பேசுவேன். ஆனால் இப்போது நான் அதிக கவனமாக உள்ளேன். வெளிப்படையாக வருகின்ற நபர்கள் குறி வைக்கப்படுகிறார்கள் ஆகவே அவர்களின் பணி மிக மிக குறுகியதாக உள்ளது. நீங்கள் மனித உரிமைகளுக்காக வேலை செய்ய வேண்டும், ஆகவே நீங்கள் எதையாவது தொடங்க வேண்டும், நீங்கள் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும், ஆனால் அதற்கான இடைவெளி இங்கே மிக மிக குறைவாகவே இருக்கிறது."*

- கனடா, டொரன்டோவில் உள்ள தமிழ் செயற்பாட்டாளர்

*"எனது சகோதரனின் பிள்ளைகள் வன்னியிலேயே இருக்கிறார்கள். புலிகள் இயக்கத்தினர் இங்கே பணத்தை சேகரித்து அதனைப் பாவித்து அங்கே உள்ள பிள்ளைகளை பயிற்றுவித்து அவர்களை இராணுவத்துடன் மோதவிட்டு சாக செய்கிறார்கள். இங்கே பணம் சேகரிப்பவர்கள் அழகான கார்களில் ஓடித்திரிந்து நல்ல வாழ்க்கை வாழ்கிறார்கள். அங்கே பலாத்காரமாக பிடிக்கப்பட்டு சண்டைக்கு அனுப்பப்பட்டு இறந்துபோகும் பிள்ளைகளைப் பற்றி அவர்களுக்கு கவலை கிடையாது."*

- புலிகள் இயக்கத்திற்கு மாதாந்த கொடுப்பனவாக நிதி வழங்குவதற்கு இணங்கும்படி அழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்ட டொரன்டோ பெண்ணொருவர்

*"அவர்கள் 2,000 பவுண்டுகள் தரும்படி கேட்டார்கள். "நீங்கள் இங்கே நிதிப் பங்களிப்பு செய்தால், நீங்கள் இலங்கைக்குப் போய் உங்கள் குடும்பத்தினரைப் பார்க்கலாம். நாங்கள் உங்களுக்கு ஒரு PIN இலக்கத்தைத் தருவோம். நீங்கள் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாக நடமாடுவதற்கு அந்த இலக்கம் வகைசெய்யும். இல்லாவிட்டால் உங்களுக்கு பிரச்சினை வரும். நீங்கள் இங்கே நிதி கொடுக்காவிட்டால், இலங்கைக்கு சென்று, இரண்டு மூன்று மடங்காக அதை நீங்கள் கொடுக்க வேண்டி வரலாம்."*

- 2005 ஆகஸ்டில். புலிகள் இயக்கப் பிரதிநிதிகளால் நிதி கேட்டு அணுகப்பட்ட இலண்டன் தமிழர் ஒருவர்